# LAABH SAMACHAR

லாப் ஸமாச்சார் வணிக மாத இதழ்

Volume: 14 Issue : 02 MAY 2025 Tamil & English Monthly Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE



உள்நாடு மற்றும் வெளிநாடு விமான டிக்கெட்ஸ் குறைந்த விலையில் வாங்க

IndiGo  AIR INDIA  spiceJet  Emirates  Lufthansa

VH VEDHAVALLI HOLIDAYS

வேதவல்லி ஹாலிடேஸ்

காமராஜர் சாலை, மதுரை

91599 18447






SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

சௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536


METRO
அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்
மெட்ரோ ஷூ மார்ட்
16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.
PH : 23322364, 2331297, 4382343


Ananda Nilayam
Mayflower
The Banquet Hall A/C
Location - Google Map
Marriage Function
Betrothal
Naming Ceremony
Birthday Party
Puberty
Get-to-gether
Hall available for all type of functions
Address: 161F, Salaipillaiyar Koil Street, Kamarajar Salai, Madurai - 625001
For Bookings - Contact: 94439 30728 / 86100 06493 / 92442 31583


KARPAGAM GROUP OF COMPANIES
SINCE 1985
Karpagam
Auto Group of Companies
Dealers in Automobile Spare Parts
53, 56, 67, Tamil Sangam Road, Madurai - 625 001. Tamilnadu
Ph. 0452-4375875, 2342267, 2340067 | email : stores@karpagamauto.com

# தலைவர் அறிக்கை

*அவ்கிதெஞ்கோ மொன்னு பொறெ*

**நமஸ்கார்...**

K.K. தினேஷ், தலைவர்

மே 6ம் தேதி நடந்த மாதாந்திர கூட்டத்தில் இந்தியன் வங்கி அதிகாரிகளிடம் எம்எஸ்எம்இ உதவி இயக்குநர் முன்னிலையில் நம் உறுப்பினர்கள் ஊக்கத்துடன் தொழிற்கடன் கேட்டு மனுக்கள் சமர்ப்பித்தது, சேம்பர் வரலாற்றில் ஒரு மைல்கல் எனலாம். தொழில்முனைவோர் தங்களது வியாபார அபிவிருத்திக்காக ஆர்வத்துடன் செயல்படுவதும் அதற்கு வங்கி அதிகாரிகள் ஆக்கத்துடன் ஆதரவுக்கரம் நீட்டுவதும் கண்கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

அவோ!... மிளோ!... ஹொடோ!... என்ற சேம்பரின் முழக்கம் மெய்ப்பிக்கப்பட்டுவிட்டதாக, இந்த நிகழ்ச்சி இருந்தது, மட்டற்ற மகிழ்ச்சியளிக்கிறது. வருங்காலத்தில் இதைப்போலவே மேலும் பல உறுப்பினர்களின் தொழில் முன்னேற்றத்திற்காக, சேம்பர் தொடர்ந்து பாடுபடும் என உறுதி அளிக்கிறோம்.

மே 7-ம் தேதி, நம் தாய்த்திருநாட்டின் சரித்திரத்தில் மறக்கமுடியாத நாள் என்றால், அதை மறுக்க முடியாது. ஆம், ஏப்ரல் 22-ம் தேதி காஷ்மீரில் நடந்த பயங்கரவாதத்திற்கு, சுற்றுலா சென்ற 26 அப்பாவி மக்கள் பலியானதற்கு நம் ராணுவம் தகுந்த பதிலடி கொடுத்த நன்நாள்.

நாட்டின் நலன் கருதி எடுக்கப்பட்டுவரும் ராணுவ நடவடிக்கைகள் சரியா, தவறா என்கிற விவாதங்கள் இப்போதைய சூழ்நிலையில் தேவையற்றது என்பது மட்டுமின்றி பொறுப்பின்மையும்கூட. இந்தியாவை, இந்திய மக்களைப் பாதுகாப்பதற்காக நமது ராணுவம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளுக்கு துணை நிற்பது தான் உண்மையான தேசப்பற்று!

உறவுக்கு கை கொடுப்போம், உரிமைக்கு குரல் கொடுப்போம், உயிருக்கு குந்தகம் விளைவித்தால் உரத்த குரலில் உணர்வுபூர்வ செயலில், உலகிற்கே உரைப்போம்.

'ஆப்பரேசன் சிந்தூர்' என ஆர்ப்பாட்டமாக பெயர் சூட்டி, அடாவடித்தனம் செய்தவர்களுக்கு, ஆணித்தரமாக ஆப்பு அடித்த அசகாயசூரர் பாரதப்பிரதமர் மற்றும் அவர்தம் அர்ப்பணிப்பு குழுக்களுக்கு, பாரதியாரின் பாடல் வரிகளில் வாழ்த்துகின்றோம்.

**நம் பாரத தேசம் என்று தோள் கொட்டுவோம்!!!**

ஜெய்ஹிந்த்!

SOURASHTRA CHAMBER OF COMMERCE

## BOARD OF MEMBERS YEAR 2024-2026

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| K.K. Dinesh | President | 98421 16461 |
| T.R. Mohanram | Imm. Past President | 93441 01432 |
| K.K. Kubendran | Vice President | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | General Secretary | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Treasurer | 94439 30728 |
| S.G. Srinivasan | Joint Secretary | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Joint Secretary | 93441 52068 |
| V.G. Ramdoss | External Aff. / EC Member | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | EC Member | 90809 51577 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | EC Member | 98655 45048 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| K.K. Dinakaran | EC Member | 98409 60833 |
| K.V. Kumaresan | EC Member | 98940 51735 |
| S.S. Ramsundar | EC Member | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | EC Member | 94422 44648 |
| T.M. Rubesh Babu | EC Member | 95000 35200 |
| S.S. Premkumar | EC Member | 96293 42295 |
| S.R. Sundarnath | EC Member | 92444 03917 |
| M.M. Dhanasekaran | EC Member | 98421 58085 |
| K.B. Sivaprakash Babu | EC Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | EC Member | 99524 22260 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| Kumaran B. Jaghuva | Yr. 2019-2022 | 99949 26348 |

**Advisors**

| | |
|---|---|
| K.K. Surendranath | 98409 88810 |
| T.K.D. Mohan | 98430 52530 |

**Patron Members**

| | |
|---|---|
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| (Late) K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |

| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| E.R.K. Vignesh Babu | Chairman | 94422 44648 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| Bhaskar Laguduva | Member | 82178 93697 |
| K.K. Shankar | Member | 97881 62559 |
| K.K. Ramkumar | Member | 98421 40007 |



# பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- A.B. குமரேஷ் பாபு

04.05.2025 - ஸெளராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் 4வது செயற்குழு கூட்டம் காந்தளூரில் நடைபெற்றது. சேம்பர் முன்னாள் தலைவர்கள், நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

06.05.2025 – மே மாத தொழில் வர்த்தக கூட்டம் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் கழகத்தின் திட்டங்கள், கடன் மற்றும் மானியங்கள் குறித்து நடத்தப்பட்டது. எம்எஸ்எம்இ மற்றும் இந்தியன் வங்கி இணைந்து இந்தக் கூட்டத்தை நடத்தியது. கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் தலைமைத் தாங்கினார். சிறப்பு விருந்தினராக Madurai, Br. MSME DFO., Asst. Director திரு. P. ஜெயசெல்வம் அவர்களும், கௌரவ விருந்தினராக Madurai, Indian Bank Zonal Manager, Dy. General Manager திரு. M.V. பாலசுப்பிரமணியன் அவர்களும் கலந்து கொண்டு பேசினார்கள். இந்தக் கூட்டத்தில், கடன் தேவைப்படும் தொழில் முனைவோர்களுக்கு உடனடியாக வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

நிகழ்ச்சியல், உடனடி கடன் வழங்கும் முயற்சியை மேற்கொண்ட செயற்குழு உறுப்பினர் திரு. N.S. பிரேம் குமார் அவர்களையும், நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த திரு. S.M. கார்த்தி குமரன் அவர்களையும் சேம்பர் பாராட்டுகிறது.

வருகின்ற ஆகஸ்ட் மாதம், ஸெளராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் SCC Trade Fair 2025 - வர்த்தக கண்காட்சி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. 75 ஸ்டால்கள் இடம்பெற இருக்கின்றன. நம் சமூக தொழில் முனைவோர்கள் தங்கள் நிறுவனத்தை, பொருட்களை சந்தைப்படுத்த இது சிறந்த களமாக இருக்கும். நமது சேம்பர் மூலம் நடத்தப்படும் வர்த்தக கண்காட்சிக்கு சமூக மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருந்து வருவது குறிப்பிடத்தக்கது. இந்த ஆண்டு நடத்த இருக்கும் வர்த்தக கண்காட்சியில் நிறுவனங்கள் பங்கேற்க அன்புடன் அழைக்கிறோம். இது குறித்த விரிவான தகவல்கள் விரைவில் அறிவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பஹல்கம் துயரச் சம்பவம் – ஆபரேஷன் சிந்தூர்-ல் நம் ராணுவ வீரர்களின் வீரம்மிக்க செயல்களை நமது ஸெளராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் கொண்டாடுகிறது. பார் போற்றும் பாரதப்பிரதமரை கொண்டதற்கு பாரதம் பெருமை கொள்கிறது.



# இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- E.R.K. விக்னேஷ் பாபு

நமது லாப் ஸமாச்சார்-ன் ஏப்ரல் மாத இதழ் ப்ளாக் ஃபாரஸ்ட் திரு. ஆனந்த் அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது மகிழ்ச்சியளிக்கிறது.

சென்ற மாத இதழுடன், அங்கத்தினர்களின் கருத்தை அறிவதற்காக கூகுள் விண்ணப்பத்தை இணைத்து வாட்ஸ்ஆப் உறுப்பினர் குழுவில் பகிரப்பட்டது. பலர் தங்களது கருத்துக்களை அளித்தனர். இந்த மாத இதழுக்கும் தங்களது கருத்துக்களை வரவேற்கிறோம். தங்களின் கருத்துக்களின் அடிப்படையில் நமது இதழை மேலும் மெருகூட்ட வாய்ப்பாக இருக்கும் என்பதை இருக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

மத்திய அரசு தபால் கட்டண சேவையில் மாற்றங்களை கொண்டு வந்துள்ளது. அதன்படி சலுகை அடிப்படையிலான தபால் கட்டண சேவைகளை நிறுத்தியுள்ளது தெரிகிறது. நமது லாப் ஸமாச்சார் இதழ் தபால் கட்டணத்தில் சலுகையைப் பெற்றது. இந்த சேவை தொடர்ந்த பெற இருக்க வழியுறுத்தி நமது லாப் ஸமாச்சார் வெளியீட்டாளரும், முன்னாள் தலைவருமான திரு. K.K.G. பிரபாகரன் அவர்கள் முயற்சி மேற்கொண்டு வருகிறார். அவருக்கு இதழ் குழுவின் சார்பாக நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

சமீபத்தில், பனிரெண்டாம் வகுப்பு தேர்தல் முடிவுகள் வெளியானது. இதில் வெற்றி பெற்ற நம் சமூக மாணவர்களை ஸெளராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் வாழ்த்துகிறது.

## திருக்குறள்

**நாடென்ப நாடா வளத்தன நாடல்ல**
**நாட வளந்தரு நாடு**


***பொருள்:*** தேடியலைந்து தவிக்காமல் வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகள் எளிதில் கிடைக்கக்கூடிய நிலப்பகுதியே நல்ல நாடு; அப்படியின்றி மிகவும் முயன்று தேடியலைந்துதான் வாழ்க்கை வசதிகளைச் செய்துகொள்ள முடியும் என்ற இடங்கள் நாடுகளல்ல

அதிகாரம் 74 | நாடு(தேசம்) | அங்கவியல்

**Kindly send us your Subscription, Donations & Bulletin Advt. to our Bank Account**

Name : Sourashtra Chamber of Commerce
Bank : State Bank of India
Acct. No. : 30134805614
Branch : Madurai City
IFSC : SBIN0011544




*With Best Compliments*

BVK GROUP

FINANCE | LAND | SUN | WIND

Shri. **Bala V Kutti**

CHAIRMAN
BVK GROUP OF COMPANIES

Indowind Energy Ltd
Indus Finance Ltd
EverOn Power Ltd
BeKae Props P Ltd
BVK Foundation

OFFICES
Chennai | Mumbai | Madurai | Bangalore

SITES
Tamil Nadu - A'boly, Nettur, Palladam, Gudimangalam, Courtallam
Karnataka - Gadag, Chitradurga, Hanumansagar
Gujarat - Nanichandur | Andhra Pradesh - Guntur

contact@bvkgroup.com www.bvkgroup.com




# குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் அமைப்பின் புதிய திட்டங்கள், மானியம் மற்றும் கடன் வாய்ப்புகள்

சௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் மே மாத தொழில் வர்த்தக கூட்டம் கடந்த 06.05.2025 அன்று மாலை 6 மணிக்கு சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தை நமது சேம்பருடன், எம்எஸ்எம்இ மற்றும் இந்தியன் வங்கி இணைந்து நடத்தியது.

இந்த நிகழ்ச்சியில், சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் அமைப்பின் திட்டங்கள், கடன் மற்றும் மானிய விபரங்களை அறிந்து கொள்ளவும், நமது சேம்பர் தொழில் முனைவோர்கள், இந்தியன் வங்கியின் தொழில் பிரிவினருக்கான கடனை உடனடியாக பெறவும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் தலைமைத் தாங்கினார். சிறப்பு விருந்தினராக Madurai, Br. MSME DFO., Asst. Director திரு. P. ஜெயசெல்வம் அவர்களும், கௌரவ விருந்தினராக Madurai, Indian Bank Zonal Manager, Dy. General Manager திரு. M.V. பாலசுப்பிரமணியன் அவர்களும் கலந்து கொண்டு பேசினார்கள்.

கௌரவ விருந்தினரை, சிறப்பு அழைப்பாளர் திரு. T.R. சரவணன் அவர்கள் கூட்டத்திற்கு அறிமுகம் செய்தார்.

கௌரவ விருந்தினர் திரு. M.V. பாலசுப்பிரமணியன் அவர்கள், தமது வங்கி தொழில் பிரிவினர்களுக்கு அலுக்கும் கடன், சலுகைகள் மற்றும் வட்டி விகிதங்கள் பற்றிப் பேசினார்.

அதன்படி, வங்கியின் மூலம் அளிக்கப்படும் Cash on Credit, Term Loan செயல்முறைகள் பற்றி விளக்கினார். அதோடு, MSME நிறுவனத்தார்களுக்கு தற்போது புதிதாக Loan against Property முறையில் பல்வேறு தொழில் பிரிவினர்களுக்கு கடன் வழங்கப்பட்டு வருவதைத் தெரிவித்தார்.

அதோடு, MSME தொழில்களுக்கான முதலீட்டு வரம்புகள் அதிகரிப்பு சம்பந்தமாகவும் பேசினார்.

நிறைவாக, நமது சௌராஷ்ட்ர சமுதாய மக்களின் உண்மை, நாணயம் மற்றும் நம்பகத்தன்மையை கருத்தில் கொண்டு அவர்களுக்கு கடன் வழங்குவதற்கு தமது வங்கி முன்வருவதாகத் தெரிவித்தார்.

கடன் பெற விரும்பிய தொழில் முனைவோர்கள் பலர், வங்கியின் மூலம் வழங்கப்பட்ட விண்ணப்பத்தை பூர்த்தி செய்து, ஆவணங்களை இணைத்து மேடையில் அளித்தனர். சிறப்பு விருந்தினர் அவர்கள், பெறப்பட்ட விண்ணப்பங்களை பரிசீலித்து கடனை உடனடியாக அளிக்க ஏற்பாடு செய்யப்படும் என்று உறுதியளித்தார்.

அவரையடுத்து, சிறப்பு விருந்தினரை, சிறப்பு அழைப்பாளர் திரு. T.G. சூரஜ் லால் அவர்கள் அறிமுகம் செய்தார்.

சிறப்பு விருந்தினர் திரு. P. ஜெயசெல்வம் அவர்கள், சிறு, குறு மற்றும் நடுத்தர அமைப்பின் திட்டங்கள் குறித்துப் பேசினார். இந்த அமைப்பினால் அளிக்கப்படும் தொழில் பயிற்சி வகுப்புகள், அதன்மூலம் வழங்கும் வங்கிக்கடன் மற்றும் சலுகைகள் பற்றி விவரித்தார்.

தற்போது கடனுக்கான மானியங்கள் 15 சதவீதம் முதல் 35 சதவீதம் வரை வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார். மேலும், உத்யம் பதிவின் அவசியம், பார் கோடு பயன்கள் குறித்தும் விளக்கினார்.

பொருளை சந்தைப்படுத்த விரும்புவோருக்கு குறைந்த கட்டணத்தில் வலைத்தளம், வெளிப்படைத்தன்மையுடன் கூடிய ஏலமுறையில் அரசின் ஜெம் போர்டல் வழிமுறைகள் பற்றியும் விளக்கினார். இந்த ஜெம் திட்டத்தில், தமிழ்நாட்டில் பலர் குறைந்த விழிப்புணர்வுடன் உள்ளதாகத் தெரிவித்து, இதில் உள்ள பயன்களை சுருக்கமாக விவரித்தார்.

JC கணேசன் மருத்துவமனை
NABH Accredited
அழகர்கோயில் ரோடு, சர்வேயர் காலனி, மதுரை - 7
98421 03579, 98427 03579, 97886 03579
jcganesan@gmail.com , Facebook.com/jcortho
Dr. J.C. GANESAN
MBBS., D.Ortho., DNB Ortho, MNAMS, Mch ortho(UK)
Dr. MALARKODI GANESAN
MBBS., DGO, DNB(org)
சிறப்பு சிகிச்சை முறைகள்
- மூட்டு மாற்று அறுவை சிகிச்சை
- ஆர்த்திராஸ்கோப்பி சிகிச்சை
- சேராத எலும்பை சேர்க்கும் / வளர்க்கும் வளையமுறை இல்லிசாரோவ் சிகிச்சை
- முதுகு, மூட்டு, தோள்பட்டை வலி சிகிச்சை
- குழந்தையின்மை சிகிச்சை
- வலியில்லாப் பிரசவம்
- கர்ப்பப்பை கோளாறுகள்
- லேப்ராஸ்கோப்பி சிகிச்சை
இன்சூரன்ஸ் வசதி
மெடி அசிஸ்ட், ஸ்டார் ஹெல்த், பென்சனர் கவர்ன்மென்ட் எம்பிளாயிஸ், குட் ஹெல்த் வசதிகள்

அதோடு, டிரெட்ஸ் பயன்பாடு, சாம்பியன் திட்டம் போன்றவற்றை குறித்திப் பேசி தனது உரையை நிறைவு செய்ததோடு, அங்கத்தினர்களின் சந்தேகங்களுக்கு விளக்கமும் அளித்தார்.





நிகழ்ச்சிக்கு கலந்து கொண்டு இரண்டு விருந்தினரையும் நமது சேம்பர் நினைவுப் பரிசு வழங்கியும், பொன்னாடை அணிவித்தும் கௌரவித்தது.

இதனையடுத்து, சேம்பர் இணைச் செயலாளர் திரு. T.N. சூரியபிரகாஷ் அவர்கள் சேம்பர்-ன் அடுத்த நிகழ்ச்சி ஏற்பாடுகள் குறித்து அறிவித்தார்.

நிறைவாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. A.B. குமரேஷ் பாபு அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.





இந்த சிறப்பான நிகழ்ச்சியை சேம்பர் நிகழ்ச்சிக்குழு ஒருங்கிணைப்பாளர் திரு. S.M. கார்த்தி குமரன் அவர்களும், செயற்குழு உறுப்பினரும், அரசு தொடர்புகுழு ஒருங்கிணைப்பாளருமான திரு. N.S. பிரேம் குமார் ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.

கூட்டத்திற்கு கலந்து கொண்ட அனைவருக்கும் அறுசுவை இரவு உணவு விருந்து ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.





இதனை வழங்கிய முன்னாள் தலைவர் திரு. M.K. கலாதர் பாபு, போஷக உறுப்பினர் திரு. T.L. சபரி பாபு, சிறப்பு அழைப்பாளர் திரு. B. ஆனந்த், செயற்குழு உறுப்பினர்கள் திரு. S.S. ராம்சுந்தர், திரு. T.M. ருபேஷ் பாபு, சிறப்பு அழைப்பாளர்கள் திரு. B.S. ராஜன், திரு. R.R.R. சிவக்குமார் மற்றும் திரு. T.K. அமர்நாத் பாபு ஆகியோருக்கு சேம்பர் நன்றி தெரிவித்துக்கொள்கிறது.





உடன், உணவுக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் திரு. K.B. சிவப்பிரகாஷ் பாபு மற்றும் குழுவினர், வாழ்த்துக்குழு ஒருங்கிணைப்பாளர் திரு. T.K. யாகேஸ்வரன் மற்றும் குழுவினரின் பணியை சேம்பர் பாராட்டுகிறது.




**Newly joined Life Members:**

| S.No. | Company Name | Name of the Person | Introducer |
|---|---|---|---|
| 01 | Arun Caterers | Mr. Arun B.S. | Dhanasekar MM |
| 02 | Builders & Real Estate | Mr. Ravindran A.M. | Sivanath Babu TK |
| 03 | Habile Design & Construction | Er. Harish K.J. | Dhanasekar MM |
| 04 | S.S.S & Associates | Mr. Balaji P.J. | Karthi Kumaran |
| 05 | Raja Trading | Mrs. Aswini K.S. | Ganesh ASV |
| 06 | Sri Sakthi Home Construction | Mr. Ganesh J.C. | Kumaresh AB |
| 07 | Plastic Business | Mrs. Hemamalini V.S. | Srinivasan SG |
| 08 | Builder & Real Estate | Mr. Krishnakumar O.B. | Sivakumar KS |
| 09 | Builders & Real Estate | Mr. Praveen Kumar K.M.K | Dinesh K.K. |
| 10 | Sew Art Exports | Mrs. Savithri K.S. | Prem Kumar N.S. |
| 11 | Ocean Engineering Consultant | Er. Krishnamoorthy T.N. | Dhanasekar MM |
| 12 | Tradiart Academy Pvt.Ltd. | Mrs. Swarna Raja Kochi | Srinivasan S.G. |

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொலீம் 2025 நிகழ்ச்சியில் புதிதாக இணைந்த ஆண்டு சந்தா மற்றும் ஆயுட்கால உறுப்பினர்கள் பெயர் விபரங்களின் தொடர்ச்சி இந்த மாத இதழில் வெளியீடு செய்யப்பட்டுள்ளது.

**Newly joined Annual Members:**

| S.No. | Company Name | Name of the Person | Introducer |
|---|---|---|---|
| 01 | JR Traders | Mr. Karthik V.J. | Rathnakumar PS |
| 02 | Sri Shanmuga Traders | Mr. K Srinivasan | NA |
| 03 | Sri Sabari Kumaran Screen | Mr. K.M. Hariharan | NA |
| 04 | DK Shop & Maligai | Mr. Balaji D.K. | At Office |
| 05 | Individual | Mr. Kannan K.V. | Ramesh Babu ES |
| 06 | Corel Cell Care | Mr. Ganesan M. | Prem Kumar SS |
| 07 | Alamu Beauty Parlour | Mrs. Kavitha S.A. | Kumaresh AB |
| 08 | Food Sector | Mrs. Ripu Hasini T.S. | Rekha GRS |
| 09 | Dhasam Info Technologies | Mr. Haribabu K.S. | Shyamala |
| 10 | Abi Digital Seva | Mr. Ashok Babu S. | Vishnuvardhan VS |



## இதழ் வெளியீடு

நமது லாப் ஸமாச்சார்-ன் ஏப்ரல் மாத இதழ் ப்ளாக் ஃபாரஸ்ட் நிறுவனத்தார் திரு. B. ஆனந்த் பாபு அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது. அவர் லாப் ஸமாச்சார் சிறப்பாக வெளிவர வாழ்த்தினார். (இடமிருந்து வலம்: இதழ் குழு உறுப்பினர் திரு. K.S. சிவக்குமார், பொருளாளர் திரு. V.V. ராம்லக்ஷ்மண்ஜி, இதழ்குழு உறுப்பினர் திரு. K.K. ராம்குமார், தொழிலதிபர் திரு. B. ஆனந்த் பாபு இதழ் குழு ஆசிரியர் திரு. E.R.K. விக்னேஷ் பாபு, சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ்


**Sowndarya Traders**

Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary

T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733



WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com

# தமிழ்நாட்டில் பத்திரிகைகளின் வரலாறு ஒரு பார்வை

- இந்தியாவின் பத்திரிகை வரலாறு 'ஜேம்ஸ் ஆகஸ்டஸ் ஹிக்கி' என்ற ஐரிஷ் நபர் வெளியிட்ட 'பெங்கால் கெஜட்' மூலம் 1780ம் ஆண்டில் தொடங்கியது. இது இந்தியாவின் முதல் பத்திரிகை ஆகும். இந்த பத்திரிகை ஆங்கிலேய அரசை கடுமையாக விமர்சித்ததற்காக 1782ம் ஆண்டில் முடக்கப்பட்டது.
- ரிச்சர்ட் ஜான்ஸ்டன் என்ற முன்னாள் பிரிட்டிஷ் படைத்துறை அதிகாரி 1785 அக்., 12ம் தேதி மெட்ராஸ் கூரியர் என்ற பத்திரிகையை நிறுவினார். இது மெட்ராஸ் பிரசிடென்ஸியில் வெளியான முதல் பத்திரிகையாகும்.
- 1795ம் ஆண்டுக்குப் பிறகு தான் 'மெட்ராஸ் கெஜட்' மற்றும் 'இந்தியன் ஹெரால்டு' போன்ற போட்டி பத்திரிகைகள் தோன்றின. இதில் இந்தியன் ஹெரால்டு ஒரு அங்கீகரிக்கப்பட்டாத பத்திரிகையாக இருந்ததால், அதன் நிறுவனர் ஹம்ஃபிரிஸ் நாடு கடத்தப்பட்டார்.
- தமிழ் பத்திரிகையியல் வளர்ச்சி மிக மெதுவாகவே நடைபெற்றது. 19ம் நூற்றாண்டு இறுதிவரை தமிழ் பத்திரிகைகள் மிகக் குறைவாகவே இருந்தன. ஆரம்பக் கட்டத்திலேயே தமிழில் வந்த பத்திரிகைகள் பெரும்பாலும் அரசியலற்றவையாக இருந்தன. இவை பெரும்பாலும் இயேசு மிஷனரிகளால் நடத்தப்பட்டு, மத மாற்றம் செய்யும் நோகத்தில் வெளியிடப்பட்டன.
- அந்தக்காலத்திய முக்கியமான தமிழ் பத்திரிகைகள் என்றால் அவை – 'தமிழ் பத்தரிகை'(1831) – தமிழ் மொழியில் முதல் மாத பத்திரிகை. இதை Religious and Tract Society வெளியிட்டது. அரசின் ஆதரவு இருந்தாலும், இது இரண்டு ஆண்டுகளில் மூடப்பட்டது.
- 'ராஜவிர்த்தி போதினி' (1885) – இது பெரும்பாலும் ஆங்கில பத்திரிகைகளிலிருந்து மொழிபெயர்க்கப்பட்ட செய்திகளை வெளியிட்டது.
- 'தினவணிகமணி' – இது Rev. P. பெர்சிவல் என்பவரால் தொகுக்கப்பட்டு திராவிட பிரஸ் மூலம் வெளியிடப்பட்டது. அரசின் ஆதரவு இருந்த இப்பத்திரிக்கைக்கு 1000 பிரதிகள் விற்பனை ஆகியதாகக் கூறப்படுகிறது.
- 'ஜனவிநோதினி' – இது பிரிட்டிஷ் ஆதரவுடன் வெளியிடப்பட்ட பத்திரிகையாகும். இராமாயணத்தைத் தொடராக வெளியிட்டது. இது செய்திகளை விட இலக்கியம் மற்றும் கல்விக்கே அதிக முக்கியத்துவம் அளித்தது.
- 'விவேக விலாசம்'(1865) – இது இயேசு மிஷனரிகளின் பாசுரங்களை எதிர்த்து வெளியிடப்பட்ட பத்திரிக்கையாகும். இதனை மிஷனரி அல்லாத தமிழ் அறிஞர்கள் வெளியிட்டனர்.
- மெட்ராஸ் (இன்றைய சென்னை) தான் இந்த பத்திரிகைகளின் மையமாக இருந்தது. இது தமிழ் மட்டுமின்றி பல பிராந்திய மொழிகளில் பத்திரிகைகள் வெளியிடப்பட்ட இடமாகவும் இருந்தது. 1876ம் ஆண்டில், தமிழ், தெலுங்கு, மலையாளம் & ஹிந்தி ஆகிய நான்கு மொழிகளில் 19 பத்திரிகைகள் மெட்ராசிலிருந்து வெளியிடப்பட்டன.
- 1882ம் ஆண்டு ஜி. சுப்ரமணிய அய்யர் 'சுதேசிமித்திரன்' என்ற வாரப்பத்திரிகையை தொடங்கினார். அவர் 'தி இந்து' பத்திரிகையின் ஒருங்கிணைப்பாளர்களில் ஒருவர் ஆவார். இந்த வார பத்திரிகை 1899ம் ஆண்டில் ஒரு தின பத்திரிகையாக மாறியது.
- 'மெட்ராஸ் மெயில்' பத்திரிகை, பின்னர் 'தி மெயில்' என அழைக்கப்பட்டது. 1868ம் ஆண்டு சார்லஸ் லாஸன் மற்றும் ஹென்றி கார்னிஷ் ஆகியோரால் தொடங்கப்பட்டது. இவர்கள் இருவரும் முன்னர் மெட்ராஸ் டைம்ஸ் பத்திரிகையில் பணியாற்றியவர்கள். 'மெயில்' பத்திரிகை, 'மெட்ராஸ் டைம்ஸ்' மற்றும் 'தி இந்து' விற்கு முக்கியமான போட்டியாளராக உருவெடுத்தது.
- 1921ம் ஆண்டு ஐரோப்பிய தொழலதிபர் ஜான் ஓக்ஷாட் ராபின்சன் இந்த பத்திரிகையை வாங்கி தனது தொழில்துறைகளில் ஒன்றாக இணைத்தார்.
- 1928ல் 'தி மெயில்' என்ற மாலை ஆங்கில பத்திரிகை Associated Publishers நிறுவனத்தால் வாங்கப்பட்டது மற்றும் அதே பெயருடன் தொடர்ந்து வெளியிடப்பட்டது.
- 1945ம் ஆண்டு, இந்திய தொழிலதிபர் எஸ். அனந்த ராமகிருஷ்ணன் பத்திரிகையை வாங்கினார். இது 1981ம் ஆண்டு மூடப்படும் வரை அவரும், அவரது குடும்பமும் அதை நடத்தினர்.
- 'தி மெயில்' பத்திரகை 1982 ஜனவரி 1ம் தேதி மூலம் நிறுத்தப்பட்டது.
- பாரதியார் பத்திரிகைத்துறையில் தனது பயணத்தை 'சுதேச மித்திரன்' பத்திரிகையின் வழியாகத் துவக்கினார். அங்கு அவர் ஒரு குறுகிய காலத்திற்கு உப தொகுப்பாளராக பணியாற்றினார்.
- 1914 டிசம்பர் மாதம், பாண்டிச்சேரியில் இருந்த போது பாரதியார் 'தி இந்து' பத்திரிகைக்கு எழுதிய ஒரு கடிதத்தில் ஜி. சுப்ரமணிய அய்யருக்கு தனது பாராட்டுகளை இவ்வாறு பதிவு செய்தார். அதில், "தன் தாய் மொழியில் பயிற்சி இல்லாத நிலையில் கூட, சுப்ரமணிய அய்யர் தமிழ்ப் பத்திரிகையை உலகிற்கு அறிமுகப்படுத்தினார். தமிழ் மொழியை அற்பமாக கருதும், ஆங்கில பள்ளிகளில் படித்து கல்வியாளர் என தங்களை கருதும் பலரைப் போலவே, அவரது இளமைக்காலத்திலும் தமிழ் மொழியைக் காணவில்லை. ஆனால். அவரது தேசிய உணர்வு வளர்ந்ததும், தமிழரின் மேம்பாட்டிற்கு தமிழ் மொழியே முக்கிய சாதனமாகவும், அவசியமானதுமாகவும் இருப்பதை உணர்ந்தார். துணிந்தார் வென்றார் என்பதற்கேற்ப அவர் முயன்றார். வெற்றியும் பெற்றார். அவர் நிறுவிய தமிழ் நாளிதழ், தவறுகளுடன் இருந்தாலும், தமிழ் நாட்டில் மிகவும் பயனுள்ள பத்திரிகையாக இருந்தது".
- அவருக்குப் பிறகு ஏ. ரங்கசாமி ஐயங்கார் 'சுதேசமித்திரன்' பத்திரிகையின் தொகுப்பாளராக பொறுப்பேற்றார். இந்த பத்திரிகை இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தூதப் பத்திரிகையாகவும், 'தி இந்து'–வின் தமிழ் பதிப்பாகவும் பரவலாகப் பாராட்டப்பட்டது.
- அதன் மிகப்பெரிய வளர்ச்சிக்கு காரணமானவரும், அதை மக்கள் பத்திரிகையாக மாற்றியவரும் சி.ஆர். ஸ்ரீனிவாசன் ஆவார். அவர் 1928ல் ஏ. ரங்கசாமி ஐயங்காரிடமிருந்து பதிவை ஏற்றார்.
- சி.ஆர்.எஸ். என்று பத்திரிகை வட்டாரத்தில் அறியப்பட்ட அவர், ஆங்கிலததிலும் சிறந்த விமர்சகர் ஆவார். அவர் இறந்த பின்னர், 1962ல் பத்திரிகையின் வளர்ச்சி குறைந்தது மற்றும் சில ஆண்டுகளில் மூடப்பட்டது. பிறகு மற்றொரு உரிமையாளரால் மீண்டும் வெளியிடப்பட்டது. ஆனால் பழைய மாயம் திரும்பவில்லை.
- 1917ம் ஆண்டில், திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் 'தேசபக்தன்' என்ற தின பத்திரிகையைத் தொடங்கினார். இது மூன்று ஆண்டுகள் மட்டுமே வெளியானது. இது செய்திகளின் வெளிப்பாட்டில் புதிய நுணுக்கமான வடிவமைப்பை உருவாக்கும் நோக்கத்துடன் துவக்கப்பட்டது. அதன் ஆசிரியர்களில் ஒருவராக புரட்சியாளர் திரு. வி.வி.எஸ். அய்யர் இருந்தார். ஆனால் இதன் தாக்கம் பெரிதாக இல்லை.

- அதே நேரத்தில், திரு. வி கல்யாண சுந்தர முதலியாரின் 'நவசக்தி', ஒரு அரசியல் மற்றும் இலக்கிய மாத இதழ், வெளியானதும் பெரிய வெற்ற பெற்றது.
- அந்தகால தமிழ்ப் பத்திரிகையாளர்களில் மற்றொரு முக்கியமான பெயர் டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு. இவர் 1926ம் ஆண்டு மெட்ராசிலிருந்து 'தமிழ்நாடு' என்ற தினப்பத்திரிகையை வெளியிட்டார். இது சிறந்த வெற்றியை பெற்றது. அவர் இந்திய தேசிய காங்கிரஸில் உறுப்பினராக இருந்ததுடன். அன்னி பெசன்டின் ஹோம் ரூல் இயக்கத்தின் தீவிர ஆதரவாளராகவும் இருந்தார்.
- ஆனால் 1926க்குப் பிறகு, காங்கிரசின் மீது அவரது ஆதரவு குலைந்தது என விமர்சகர்கள் கூறினர். சிலர் அவர் ஹிந்து மகாசபையை நோக்கி சாய்ந்ததாகக் கூறினர். 'தமிழ்நாடு' பத்திரிகை 1930ல் மூடப்பட்டது.
- 1931ல் சில ஆர்வமுள்ள காங்கிரசார்களால் 'இந்தியா' என்ற பத்திரிகை தொடங்கப்பட்டது. ஆனால் இது பெரிய தாக்கம் ஏற்படுத்தவில்லை. 'ஜயபாரதி' என்ற குறுந்தகடு பத்திரிகை தொடங்கப்பட்டது மற்றும் ஆரம்ப வெற்றி கண்டது. நீதி கட்சி தொடங்கிய பத்திரிகையான 'திராவிடன்', ஜே.எஸ். கண்ணப்பர் என்பவரால் தொகுக்கப்பட்டது.
- 1933ல் 'தினமணி' என்ற முக்கியமான தமிழ் தினப்பத்திரிகை தொடங்கப்பட்டது. இது தமிழ் பத்திரிகைகளில் மிகவும் பழமையான ஒன்றாக கருதப்படுகிறது. இப்போது இதை 'தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்' நிறுவனம் வெளியிடுகிறது. 'தினமணி' தமிழ்ப் பத்திரிகை உலகில் ஒரு புதிய அதிர்வலை ஏற்படுத்தியது.
- தினமணியின் ஆரம்ப காலத்தில், பத்திரிகை எஸ். சதானந்த் என்பவரால் நடத்தப்பட்டது. இவர் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகையை வரதராஜுலு நாயுடுவிடமிருந்து வாங்கினார். பின்னர் இரண்டும் ராமநாதன் கோயங்காவின் கட்டுப்பாட்டுக்கு வந்தன.
- தினமணியின் முதல் ஆசிரியராக இருந்தவர் டி.எஸ். சோகலிங்கம். இவர் ஒரு தீவிர காங்கிரசர் மற்றும் சக்திவாய்ந்த எழுத்தாளராக பின்னாளில் தமிழ் பத்திரிகையியல் வரலாற்றில் சாதனை செய்தார். திரு. டி.எஸ். சோகலிங்கம் 1943ல் தினமணியை விட்டு விலகி, 1944ல் தனியாக 'தினசரி' என்ற புதிய தினபத்தரிகையைத் தொடங்கினார்.
- திரு.எஸ்.பி. ஆதித்தனார், ஒரு பிரபல வழக்கறிஞர். 1940ல் மதுரையில் 'தினத்தந்தி' என்ற தினப்பத்திரிகையைத் தொடங்கினார். பல காரணங்களால் இது வணிக ரீதியாக மிகப் பெரிய வெற்றியைபெற்றது. இதன்பதிப்பு எண்ணிக்கை பல மடங்கு அதிகரிக்க, ஆதித்தனார் மெட்ராஸ் மற்றும் பிற நகரங்களிலிருந்து பதிப்புகளை வெளியிடத் தொடங்கினார்.
- பிந்தைய காலத்தில், திராவிடக் கட்சிகள், குறிப்பாக திராவிடர் கழகம் (பெரியார் இ.வே.ரா தலைமையில்) மற்றும் திமுக (அண்ணாதுரை தலைமையில்), சுதந்திர இந்தியாவின் மெட்ராஸ் மாநிலத்தில் (பின்னர் தமிழ்நாடு) அரசியலில் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கின. இதன் பின்னணியில் அவர்கள் தங்களுக்கென பத்திரிகைகளை தொடங்கினர். அவை, திராவிடர் கழகத்தின் 'விடுதலை' மற்றும் திமுக-வின் 'நம் நாடு'.
- விடுதலை பத்திரிகை ஜுன் 1, 1935 அன்று வெளியிடப்பட்டது. பெரியார் மற்ற பத்திரிகைகள் மற்றும் இதழ்களையும் வெளியிட்டார். அவை, 'குடியரசு' (1925), 'ரெவல்ட்' (1928, ஆங்கிலத்தில்), 'பகுத்தறிவு' (1934), புரட்சி (1933). விடுதலை பத்திரிகையின் 85வது ஆண்டு விழா அண்மையில் கொண்டாடப்பட்டது.
- 

- முதற்கட்டத்தில் கை எழுத்து அறிவித்தல்களாக, 1942 ஆகஸ்ட் 10, இரண்டாம் உலகப்போர் காலத்தில், 18 வயதான எம். கருணாநிதி, 'முறசொலி'-யை துவக்கினார்.
- இது 1948ல் அச்சு வார இதழக வெளியானது. 1954ல் இதன் தலைமையகம் சென்னைக்கு மாற்றப்பட்டது. 1960ல் இது தினசரியாக வெளியிடப்படுகிறது.
- 1951, செப்டம்பர் 6 அன்று டி.வி. இராமசுப்பையர், திருவனந்தபுரத்தில் (அந்த காலத் திருவாங்கூர் மாநிலத் தலைநகரம்) 'தினமலர்' என்ற தமிழ் தினப்பத்திரிகையைத் துவக்கினார்.
- இந்த பத்திரிகை தமிழ்நாட்டின் முக்கிய பத்திரிகைகளில் ஒன்றாக வளர்ந்தது. இது தமிழ் அச்சு ஊடகத்தில் பல புதிய முயற்சிகளை எடுத்துப் பரிசீலித்தது. இன்று, இது அதிகமாக விற்பனை செய்யப்படும் நாளேடுகளில் ஒன்றாக இருக்கிறது.
- டி.வி. இராமசுப்பையர் 21 ஜுலை 1984 அன்று காலமானார். தற்போது, அவரது மகன்கள் மற்றும் பேரன்கள் இந்த பத்திரிகையை நடத்தி வருகிறார்கள். இது தற்போது தமிழ்நாடு, கர்நாடகம் மற்றும் ஆந்திரப் பிரதேசத்தில் உ ள்ள 10 நகரங்களில் அச்சிடப்படுகிறது.
- சி.பா. ஆதித்தனாரின் மாமனார் கே.பி. கந்தசாமி 'தினகரன்' என்ற தமிழ் நாளேட்டைத் தொடங்கினார். பின்னர் இது சன் டிவி குழுமத்தின் கட்டுப்பாட்டிற்கு வந்தது.
- விகடன் குழுமம் மற்றும் குமுதம் குழுமம், தமிழ் பத்திரிகை உலகில் முக்கிய வார இதழ்களையும் மாத இதழ்களையும் வெளியிட்டு வருகின்றன.



Dr.K.K.G.Prabhakaran,
Chief Editor & Publisher
Laabh Samachar
(Published by Sourashtra Chamber of Commerce)




நமது லாப் ஸமாச்சார் இதழ் வெளியீட்டாளரும், மூத்த ஆசிரியருமான திரு. K.K.G. பிரபாகரன் அவர்கள், ஜெய்பூரில், 26 & 27 ஏப்ரல் 2025 அன்று ASMNI என்றழைக்கப்படும் Association of Small & Medium Newspaper of India -ன் 31வது தேசிய மாநாட்டில் கலந்து கொண்டார். இந்த மாநாட்டில் நாட்டின் பத்திரிக்கைகள், பத்திரிக்கையாளர்கள் சாதனை குறித்துப் பேசப்பட்டது. இந்த மாநாட்டின் மூலம், திரு. K.K.G. பிரபாகரன் அவர்கள் அமைப்பின் தமிழ்நாடு பிரிவின் உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார். மேலும், அவர் எழுதிய, தமிழ்நாட்டில் பத்திரிக்கைகள் துவங்கியது பற்றிய ஒரு கண்ணோட்டம் ASMNI இதழில் வெளியானது. அதனை நமது லாப் ஸமாச்சார் இதழிலிலும் வெளியீடு செய்துள்ளோம்.

# 5000 சதுர அடி தொழிற்சாலைகளுக்கு சுயசான்று முறையில் கட்டட அனுமதி

## பணிகளை துவக்கியது டி.டி.சி.பி.,

தமிழகத்தில் 5000 சதுர அடி வரையிலான தொழிற்சாலைகளுக்கு, சுயசான்று முறையில் கட்டட அனுமதி வழங்குவதற்கான பூர்வாங்க பணிகளை, நகர் மற்றும் ஊரமைப்பு துறையான டி.டி.சி.பி., துவக்கி உள்ளது.

தமிழகத்தில் 10,000 சதுர அடி வரையிலான குடியிருப்பு கட்டடங்களுக்கு, உள்ளாட்சி அமைப்புகளே ஒப்புதல் அளிக்கலாம். இதில், சிறிய அளவிலான திட்டங்களுக்கு ஒப்புதல் பெற, அதிக தாமதம் ஏற்படுவதாக புகார் எழுந்தது.

இதையடுத்து, 2500 சதுர அடி வரையிலான மனையில், 3500 சதுர அடி பரப்பளவுக்கு வீடு கட்ட, சுயசான்று முறையில் கட்டட அனுபமதி வழங்கும் திட்டம், 2024 ஜுலையில் துவக்கப்பட்டது. இதற்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

தற்போது வரை இத்திட்டத்தில், 75000 பேர் கட்டட அனுமதி பெற்றுள்ளனர். இதனால், உள்ளாட்சி அமைப்புகளில் அலைக்கழிப்பில் சிக்காமல், எளிய முறையில் அதிகமானோர் கட்டட அனுமதி பெற்றுள்ளனர்.

இதன் அடுத்த கட்டமாக, 5000 சதுர அடி வரையிலான, சிறிய மற்றும் பசுமை வகை தொழிற்சாலை கட்டடங்களுக்கு சுயசான்று முறையில் கட்டட அனுமதி வழங்கப்படும் என, தமிழக அரசு அறிவித்துள்ளது.

இது குறித்து, டி.டி.சி.பி., உயரதிகாரி ஒருவர் கூறியதாவது, சுயசான்று முறையில் குடியிருப்பு கட்டடங்களுக்கு அனுமதி வழங்குவதில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, 5000 சதுர அடி வரையிலான, குடிசை தொழில் மற்றும் பசுமை வகை தொழிற்சாலை கட்டடங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட உள்ளது.

இதனால், சிறிய அளவிலான தொழிற்சாலைகள் துவங்குவோர், குறிப்பிட்ட சில ஆவணங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்தால் போதும். அடுத்த சில நிமிடங்களில் கட்டண விபரம் தெரிவிக்கப்படும்.

கட்டணத்தை செலுத்தியவுடன், சில நிமிடங்களில் இணையதளம் வாயிலாகவே கட்டட அனுமதிக்கான கடிதம், வரைபடம் ஆகியவை கிடைத்துவிடும்.

குறிப்பாக, ஊராட்சி பகுதிகளில், தொழிற்சாலை கட்டடங்கள் கட்டுவதற்கான சாலை அகலம், 22 அடியில் இருந்து, 19 அடியாகவும் இதில் குறைக்கப்பட உள்ளது. இதற்கான வழிமுறைகள் அடங்கிய அரசாணை வெளியிட இருக்கிறோம். இதற்கென தனி இணையதளம் விரைவில் உருவாக்கப்பட உள்ளது. இப்பணிகள் அனைத்தும் அடுத்த மூன்று மாதங்களில் முடிக்கப்பட்டு, சுயசான்று கட்டட அனுமதி திட்டம் துவங்கப்படும் என்று கூறினார்.

*– தினமலர்*

# ஆடை பிரின்டிங் செய்ய “ரோபோ” பயன்பாடு

தொழிலாளர் பற்றாக்குறையை சமாளிக்கும் வகையில், தானியங்கி டிஜிட்டல் பிரின்டிங் ரோபோ இயந்திரங்களை தயாரிக்க, திருப்பூர் பின்னலாடை துறையினர் களமிறங்கியுள்ளனர்.

பின்னலாடை மற்றும் ஆயத்த ஆடை தயஸரிப்பில், பிரின்டிங் மற்றும் எம்ப்ராய்டரிங் தொழில்நுட்பம் அத்தியாவசியமானது. மதிப்பு கூட்டப்பட்ட ஆடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதிக்கு, பிரின்டிங் தொழில்நுட்பம் அவசியமாகவும் மாறியுள்ளது.

திருப்பூர் நிட்பிரின்டர்ஸ் அசோசியேஷன் தலைவர் ஸ்ரீகாந்த் கூறியதாவது, நவீன தொழில்நுட்பத்தில், டிஜிட்டல் பிரின்டிங் அறிமுகமாகியுள்ளதால், செலவு குறைவதோடு, உற்பத்தியையும் அதிகரிக்க முடிகிறது. இதற்கேற்ப அதிநவீன இயந்திரம் தயஸரிக்க, டெக்போ ஆராய்ச்சி செய்து வருகிறது. ஏ.ஐ., தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, பிரின்டிங் துறையை நவீனப்படுத்த திட்டமிட்டுள்ளது.

சீனாவின், தானியங்கி பிரின்டிங் ரோபோ போல் இந்தியாவில் இயந்திரங்கள் இல்லை. சீன தொழில்நுட்பத்தை பின்பற்றி, சிலவகை பாகங்களை மட்டும் இறக்குமதி செய்து, கோவையிலேயே ரோபோ போனற் பிரின்டிங் இயந்திரம் வடிவமைப்பதற்கான ஆராய்ச்சி நடந்து முடிந்துள்ளது. அடுத்த நான்கு மாதங்களுக்குள், இத்தகைய இயந்திரங்கள் அறிமுகம் செய்யப்படும் என்று கூறினார்.

# பொது சார்ஜிங் மையம் அமைக்க மின் வாரியம் திட்டம்

மின்சார வாகனங்களுக்கு எளிதில் சார்ஜிங் செய்வதற்கான வசதி கிடைக்க, தமிழகம் முழுவதும் உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து பொது சார்ஜிங் மையங்களை அமைக்க மின் வாரியம் திட்டமிட்டுள்ளது.

சுற்றுச்சூழல் பாதிப்பைத் தடுக்கும் விதமாக, பெட்ரோல், டீசலுக்குப் பதிலாக பேட்டரியில் ஓடும் வாகனங்கள், சிஎன்ஜி எரிவாயுவில் இயங்கும் வாகனங்களை பயன்படுத்துமாறு அனைத்து மாநில அரசுகளையும், மத்திய அரசு அறிவுறுத்தி வருகிறது. இதற்கு ஏற்ப பலரு மின்சார வாகனங்களை வாங்கி பயன்படுத்தத் தொடங்கி உள்ளனர். மின்சார வாகனங்களுக்கு எளிதில் சார்ஜிங் வசதி கிடைக்க தேசிய நெடுஞ்சாலையில் ஒவ்வொரு 25கி.மீ., தூரத்துக்கும் ஒரு சார்ஜிங் மையம், நகரங்களில் ஒவ்வொரு 3 கி.மீ., தூரத்துக்கு ஒரு மையங்களையும் அமைக்க பொதுத் துறை நிறுவனங்களுக்கு மத்திய அரசு உத்தரவிட்டது.

அதன்படி, பசுமை மின்திட்டங்களை ஊக்குவிக்க மின்வாரியத்தின் துணை நிறுவனமான மின்னுற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் இருந்து பசுமை எரிசக்தி கழகம் தொடங்கப்பட்டுள்ளது.

இந்நிறுவனம் உள்ளாட்சி அமைப்புகளுடன் இணைந்து பொது சார்ஜிங் மையம் அமைக்க முடிவு செய்துள்ளது. இதனால் தமிழகம் முழுவதும் சார்ஜிங் வசதி கிடைக்கும்.

# கலைஞர் கைவினைத் திட்டம்

## ரூ. 3 லட்சம் வரை பிணையற்ற கடனுதவி

சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு தொழிற்கடன்கள் பெற்று தொழில் துவங்குவதை ஊக்குவிக்கும் விதமாக கலைஞர் கைவினைத் திட்டத்தை தமிழ்நாடு அரசு சமீபத்தில் அறிமுகம் செய்து வைத்தது. தமிழ்நாட்டில் உள்ள கைவினை கலைஞர்களுக்கு உதவிடும் வகையில் மத்திய அரசின் விஸ்வகர்மா யோஜனாவிற்கு மாற்றாக இந்த திட்டம் கொண்டு வரப்பட்டது.

இந்த திட்டத்தின் கீழ் ரூ. 3 லட்சம் வரை பிணையற்ற கடனுதவி மற்றும் ரூ. 50000/- வரை மானியம் பெறலாம் என அறிவிக்கப்பட்டள்ளது. மேலும், 5% வரை வட்டி மானியம் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்த திட்டத்தின் பலனை பெற விண்ணப்பிக்கும் தொழில் முனைவோர்களுக்கு திறன் மேம்பாட்டிற்கான சிறப்பு பயிற்சிகள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறைந்தபட்சம் 35வயது நிரம்பிய, எந்த வகுப்பினராக இருந்தாலும் இந்த திட்டத்தின் பலனை பெறுவதற்கு விண்ணப்பிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் மூலமாக கடன் பெற விரும்புபவர்கள் www.msmeonline.tn.gov.in/kkt என்ற அதிகாரப்பூர்வ இணையதள முகவரியில் விண்ணப்பிக்கலாம்.

# சரக்குகளை கையாளும் முனையம்

## மதுரை, ஒசூர் மற்றும் கிருஷ்ணகிரியில் ஆய்வு

துறைமுகத்தில் இருந்து அதிக தூரம் உள்ள கிருஷ்ணகிரி, ஒசூர் மற்றும் மதுரையில் ஏற்றுமதி சரக்குகளை விரைந்து அனுப்ப கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தும் திட்டத்தை செயல்படுத்துவது குறித்து ஆய்வு செய்யப்படும் என டிட்கோ மேலாண் இயக்குநர் சந்தீப் நந்நதூரி தெரிவித்துள்ளார். இதனால், தமிழகத்தில் சரக்குப் போக்குவரத்துத் துறையில் ஈடுபட்டுள்ள நிறுவனங்களின் செலவைக் குறைத்து, விரைவாக சரக்குகளை அனுப்புவதற்கு வழிவகுக்கும்.

இதன் வாயிலாக, 63000 கோடி ரூபாய் முதலீட்டையும், 1.40 – 1.60 லட்சம் வேலைவாய்ப்பை உருவாக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது. டில்லி ஹரியான உள்ளிட்ட வட மாழலங்கள், துறைமுகங்களில் இருந்து அதிக தூரம் உள்ளன. எனவே அம்மாநிலங்களில் ஏற்றுமதி செய்யப்படும் சரக்குகள் அனைத்தும் ஓர் இடத்திற்கு எடுத்து வரப்படுகிறது. அவை, அங்கிருந்து, தனி சரக்கு ரயில்களில் ஏற்றப்பட்டு, துறைமுகங்களுக்கு விரைந்து அனுப்பப்படுகின்றன.

இத்திட்டத்தை மதுரை, ஓசூர், கிருஷ்ணகிரி ஆகிய துறைமுகத்தில் இருந்து அதிக தூரம் உள்ள நகரங்களில், செயல்படுத்துவது குறித்து ஆய்வு செய்யப்படும். கடலூர் உள்ளிட்ட சிறு துறைமுகங்களை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்று தெரிவித்தார்.

# விருதுநகர் தொழில் பூங்காவில்

## கட்டமைப்பு பணி

தமிழகத்தில் ஜவுளி துறை நிறுவனங்கள் பயன்பெற, விருதுநகர் மாவட்டம் குமாரலிங்கபுரத்தில் பி.எம்.மித்ரா எனப்படும் பிரதமரின் மாபெரும் ஜவுளி பூங்கா, மத்திய மாநில அரசுகளின், 2061 கோடி ரூபாய் செலவில் உருவாக்கப்பட உள்ளது.

இதற்காக சிப்காட் எனப்படும் தமிழக தொழில் முன்னேற்ற நிறுவனம், 1052 ஏக்கர் நிலம் ஒதுக்கியுள்ளது. அதன் அருகில் இ.குமாரலிங்கபுரத்தில், 581 ஏக்கரில் புதிய தொழில் பூங்கா ஒன்றை சிப்காட் நிறுவனம் உருவாக்க முடிவு செய்தள்ளது.

அங்கு, 56 கோடி ரூபாய் செலவில் சாலை, நடைபாதை, மழைநீர் வடிகால் உள்ளிட்ட உள்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்ட உள்ளன. இந்த பூங்காவில் உள்ள மனைகள், பொதுவான தொழில் நிறவனங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட உள்ளன.

# பத்திரப்பதிவில் புதிய மாற்றம்

## சொத்து வாங்குபவர் விற்பவர் கவனத்திற்கு

தற்போது நிலம் வாங்குபவர் & விற்பவர் இருவரும் புதிய விதிகளின்படி ஆதார் அடிப்படையிலான ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டியது அவசியமாக உள்ளது. விற்பனை மற்றும் பிற ஆவணங்களை ஆன்லைனில் சமர்ப்பிக்க வேண்டும்.

துணைப் பதிவாளர் அலுவலகத்தில் பயோமெட்ரிக் சரிபார்ப்புக்காக நேரில் ஆஜராக வேண்டும். நிலத்தை துல்லியமாக அளவீடு செய்வதற்கு ஜிஐஎஸ் அடிப்படையிலான நில மேப்பிங்கை பயன்படுத்த வேண்டும். மேலும் ஆன்லைன் பதிவுகள் பராமரிக்கப்படும்.

விற்பனை ஒப்பந்த ஆவணம், பயோமெட்ரிக் வருகைப் பதிவு, ஆன்லைன் ஜிஐஎஸ் வரைபடம் வாயிலாக சொத்து இருப்பிடத்தை சரிபார்த்தல், வரி ரசீது போன்றவற்றை புதிய விதிகளில் வரப்பெற்றுள்ளது. இதனை சொத்து வாங்குபவர் மற்றும் விற்பவர் இருவரும் கவனத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.




விழித்து எழுந்தவுடன் கிடைப்பதில்லை வெற்றி ! விழுந்து எழுந்தவுடன் கிடைப்பதே வெற்றி !!
ஸ்ரீ விஜயலெட்சுமி ஸ்கிரீன்
விஜயலெட்சுமி DTP & ஸ்கிரீன்
91506-00904, 99940-18805, 78128-19162
கதிர்வேல் நகர் 1 வது தெரு, 51/51, பாலு கொத்தனார் தெரு, மீனாட்சி நகர், வில்லாபுரம், மதுரை-12.
SINCE-1993 01-07-1993 31 Years 2023 SVLS
வெள்ளி விழா கண்ட நிறுவனம்
அனைத்தும் சிறந்த முறையில் செய்து தரப்படும்
தினசரி & கட்டிங் மாத காலண்டர் | 12 DAYS DELIVERY மல்டிகலர் ஸ்டிக்கர் | தமிழ் டைரி ஆங்கில டைரி | 30 DAYS DELIVERY கோல்டு ஸ்டிக்கர்
20 DAYS DELIVERY ஜூட் பேக் & தாம்பூல பை | பார்கோட் ஸ்டிக்கர் 5 to 10 DAYS DELIVERY | விபூதி கவர் 7 DAYS DELIVERY | சாமி படம் வுட்லேமினேசன் | ஸ்கூல் லேபிள்



நட்பை விட ! நம்பிக்கையை விட !! நாணயமே சிறந்தது !!!
Cell : 98421-18873,98428-18873
R.R. பாலகுமார்
R.R. குபேந்திரன்
R.R. பிரேம்குமார்
e.mail : svlsmadurai@gmail.com

# B2B

# தொழில்முனைவோர்கள்

## எவ்வாறு சந்தைப்படுத்துவது?

சந்தைப்படுத்தலைப் பொறுத்தவரை, கொள்கைகள் மற்றும் தத்துவங்கள் உலகம் முழுவதும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியானவை. எல்லாவற்றிற்கும் மேலாக, ஒவ்வொரு வகையான சந்தைப்படுத்தலும் மக்களை இலக்காகக் கொண்டது. கலாச்சார வேறுபாடுகள், புவியியல் மற்றும் மக்கள்தொகை பிரிவுகளைக் கொண்டு நிச்சயமாக பல்வேறு நுண் சந்தைகளைக் காண முடியும். ஆனால், மக்கள், அவர்களின் தேவைகள், விருப்பங்கள் மற்றும் கோரிக்கைகள் ஓரளவு ஒத்தவை.

ஒரு பொருளுக்கு நூற்றுக்கணக்கான பிராண்டுகள் உள்ளன. ஷாம்பு முதல் கார் வரை நாம் காண்கிறோம். ஆரம்ப நிலை விலை நிர்ணயம் முதல் அதி ஆடம்பரம் வரை வகைகள் மற்றும் துணை பிராண்டுகள் உள்ளன. நீங்கள் ஒரு வலுவான பிராண்ட் வேறுபாட்டை உருவாக்கி, வெகுஜன சந்தையை நிவர்த்தி செய்வதற்கான வழிகளைக் கண்டறிந்தால், நீங்கள் வெவ்வேறு சந்தைகளுக்கு சேவை செய்யலாம்.

மார்க்கெட்டிங் கருத்துகளில் ஒற்றுமைகள் இருந்தபோதிலும், B2B அல்லது B2G பார்வையாளர்கள் இலக்காகக் கொள்ளும்போது அவை பெரும்பாலும் பொருத்தமற்றதாகிவிடும். இது ஏன் அப்படி? B2B பார்வையாளர்களில் உள்ள தனிநபர்களும் மனிதர்கள் இல்லையா? என்றால், அவர்களின் நிறுவனத்திற்கான கொள்முதல் முடிவுகளை எடுப்பதை விட தனிப்பட்ட அல்லது குடும்ப பயன்பாட்டிற்கான பிராண்டை மதிப்பிடும்போது அவர்களின் முடிவெடுக்கும் செயல்முறை இங்கு மாறுபடுகிறது.

இதைப் புரிந்துகொள்ள ஒரு நடைமுறை வழியை இங்கே காண்போம். 43 வயதான, திருமணமாகி இரண்டு குழந்தைகளுடன் மும்பையில் வசிக்கும் மிஸ்டர் எக்ஸ், ஒரு நடுத்தர நிதி நிறுவனத்தில் நிர்வாகியாக பணிபுரிகிறார் என்று வைத்துக்கொள்வோம். அவர் தனது அலுவலக வளாகத்தில் நிறுவ வேண்டிய நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தின் (Water Purifier) பிராண்டைத் தீர்மானிக்க வேண்டும். அவர் Kent, Aquaguard அல்லது Pure-it எதைத் தேர்ந்தெடுப்பார்? மூன்று பிராண்டுகளும் செயல்திறன், அம்சங்கள், விலை மற்றும் அழகியலில் ஒருமித்தவை என்று வைத்துக்கொள்வோம். இப்போது அவர் தனது வீட்டிற்கு ஒரு தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை வாங்குபவதற்கு கருத்தில் என்ன காரணிகள் மாறும்? விலை ஒரு முக்கிய காரணி என்று சொல்வதற்கு முன், ஒரு கணம் யோசித்துப் பாருங்கள்.

B2B கொள்முதல் முடிவுகள் ROI செலவு செயல்திறன், ஒருங்கிணைப்பு, அளவிடுதல் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய பகுத்தறிவு அளவுருக்களின் பட்டியலில் எடுக்கப்படுகின்றன. ஆனால், தனிப்பட்ட முடிவெடுப்பதைப் பொறுத்தவரை, அதாவது, B2C-யில் முக்கிய மதிப்பீட்டு அளவுகோல்கள் என்பது உணர்ச்சிப்பூர்வமானவை, அதைத் தொடர்ந்து உணரப்பட்ட மதிப்பு (விலை), வசதி, விசுவாசம் மற்றும் பல காரணிகள். இதனடிப்படையில் B2C சந்தை இயங்குகிறது. ஆகவே, இங்கு ஒரு தனி நபராக திரு. எக்ஸ் Kent-ஐ ஒரு முன்னணி பிராண்டாக உணர்ந்து அதன் பாதுகாப்பை சாத்தியம் செய்யலாம். ஆனால், அவர் தனது கருத்தை ஒதுக்கி வைத்துவிட்டு அலுவலகத்தில், B2B அளவுகோளின் அடிப்படையில் Aquaguard-ஐ வாங்க வேண்டியிருக்கலாம். பொருள் சிறிதோ பெரிதோ, B2B-யின் சந்தை தத்துவம் இது போன்ற விசித்திரமானது!.

நீங்கள் B2B பார்வையாளர்களை உங்கள் முதன்மை இலக்காகக் கொண்ட ஒரு சந்தைப்படுத்துபவர் அல்லது தொழில்முனைவோராக இருந்தால், உங்கள் வணிகத்தை வளர்ப்பதற்காகன சில வழிகள் இங்கே.

**பிராண்டிங் கூறுகள்:** அடிப்படைகளை சரியாகப் பெறுங்கள். அது உங்கள் வலைத்தளம், போர்ட்ஃபோலியோ தளங்கள், உயர்தர PR உள்ளடக்கம் மற்றும் செய்தி குறிப்புகள் போன்றவை. அவை சுகாதாரம் மற்றும் கட்டாயம் இருக்க வேண்டியவை. அதைச் சிறப்பாகச் செய்யுங்கள். சரியாகச் செய்யுங்கள், முடிந்தவரை விரைவாகச் செய்யுங்கள்.

**விளம்பரம்:** விளம்பரத்தில் முதலீடு செய்வது வணிக மேம்பாட்டைப் போன்றது அல்ல. மேலும் B2B விஷயத்தில், நீங்கள் யாருடன் பேச வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும். நீங்கள் செய்தித்தாளில் முழு பக்க விளம்பரம் அல்லது சமூக ஊடகங்களில் விளம்பரப்படுத்துவதை விட, தொழில்துறை நிகழ்வுகளில் பங்கேற்பது, பேசுவது அல்லது தொடர்புடைய மாநாட்டில் ஒரு கண்காட்சி அரங்கை எடுப்பது, தொழில்துறை அமைப்பின் உறுப்பினராக இணைந்து பயன்பெறுவது சிறந்தது.

B2B விளம்பரத்தைப் பொறுத்தவரை, இது நுகர்வோர் பிராண்டுகளுக்குப் பொருந்து விழிப்புணர்வு மற்றும் சிறந்த மனநிலை அளவீடுகளைப் பற்றியது அல்ல, மாறாக முக்கிய முடிவெடுப்பவர்களைக் கண்டுபிடித்த உங்கள் மதிப்பு

உள்நாடு மற்றும் வெளிநாடு விமான டிக்கெட்ஸ் குறைந்த விலையில் வாங்க
IndiGo Air India spiceJet Emirates Lufthansa
VH VEDHAVALLI HOLIDAYS
வேதவல்லி ஹாலிடேஸ்
காமராஜர் சாலை, மதுரை
91599 18447

முன்மொழிவை நிரூபிக்க ஒரு இணைப்பை நிறுவுவதாகும். இது மிகவும் அனுபவம் வாய்ந்த விற்பனை நிபுணர்களிடம் முதலீடு செய்வதாக இருந்தால், விளம்பரங்களில் சோம்பேறித்தனமாக பணத்தை வீசுவதை விட இது ஒரு சிறந்த பந்தயம் ஆகும்.

உங்கள் B2B வணிகத்தின் வகை மற்றும் சூழலைப் பொறுத்து செயலாற்றுங்கள். தெளிவாக சிந்தித்து, தொழில்துறையில் முக்கிய முடிவெடுப்பவர்களுடன் உங்களை இணைக்கும் வாய்ப்புகளை உருவாக்குவதில் முதலீடு செய்யுங்கள்.

B2B வணிக வளர்ச்சியைப் பொறுத்தவரை, சிறிய, தனித்துவமான அல்லது நன்கு வரையறுக்கப்பட்ட வாய்ப்புள்ளவர்களுடன் தொடங்குங்கள். உதாரணமாக, நீங்கள் டெல்லியை தளமாகக் கொண்ட ஒரு கார்ப்பரேட் பரிசு மற்றும் எழுதுபொருள் வணிகத்தைத் தொடங்குகிறீர்கள் என்று வைத்துக்கொள்வோம். 10000 கோடிக்கு மேல் விற்றுமுதல் கொண்ட எந்த நிறுவனத்தையும் பின்தொட ஒரு தெளிவற்ற இலக்கை நிர்ணயிக்காதீர்கள். நீங்கள் யாரை வாடிக்கையாளராகக் கொள்ள விரும்புகிறீர்கள் என்பதற்கான உங்கள் வரையறை குறுகியதாக இருந்தால், மாற்றத்திற்கான வாய்ப்பு அதிகமாகும். மேலும் ஒரு வகையைச் சேர்ந்த ஒரு பிராண்டுடன் பணிபுரிந்திருப்பது பொதுவாக அவற்றின போட்டியிடும் பிராண்டுகளுடன் வாய்ப்புகளுக்கு வழிவகுக்கும்.

B2B சந்தைப்படுத்தல் என்பது விற்பனை மற்றும் வணிக மேம்பாடு பற்றியது. முடிவுகளை வழங்குவதில் நிலையான சாதனை ஒரு பிராண்டை உருவாக்குவதற்கும் அதன் ஈக்விட்டியை அதிகரிப்பதற்கு முக்கியமாகும். இதை அடைய குறுக்குவழிகள் அல்லது துரிதப்படுத்துப்பட்ட வழிகள் எதுவும் இல்லை.

## மருத்துவத் தகவல்

**கேள்வி:** என் வயது 62 எனக்கு இடுப்பு மூட்டு எலும்பு முறிந்து அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அறுவை சிகிச்சையில் தொடை எலும்பின் தலை பகுதி மட்டும் எடுக்கப்பட்டு இருக்கிறது. எனக்கு வலி இல்லை. ஆனால், காலின் நீளம் குறைபாடு மற்றும் இடுப்பு மூட்டின் அசைவ குறைவாக இருக்கிறது. எனக்கு மாற்று சிகிச்சை உண்டா?.

**பதில்:** இடுப்பு மூட்டின் தலைப்பகுதியை மட்டும் அகற்றும் அறுவை சிகிச்சையை Girdlestone Procedure என்று கூறப்படுகிறது. பொதுவாக இந்த சிகிச்சை குறிப்பிட்ட சில பிரச்சனைகள் உள்ள நோயாளிகளுக்கு தான் இருக்கலாம். அடிப்படை காரணத்தை அறிந்து கொள்வது அவசியம். இடுப்பு மூட்டு மாற்று சிகிச்சை செய்தால் நீங்கள் நன்றாக நடக்க முடியும். மூட்டினை அசைக்கவும் முடியும் வெற்றி விகிதம் 85% மேலானது.

– மரு. கே.என். சுப்பிரமணியன்,
வேல் மருத்துவமனை &
வேல் சிறப்பு எழும்பியல் மையம்


APPOLO SALES & SERVICE
அப்போலோ
மோட்டார் & பம்ப்ஸ்
Mfrs : SRI KARTHICK PUMPS, MADURAI - 625 009. GSTIN : 33CALPK9113M1ZE
YOUR TRUSTED BRAND IN JET PUMPS SOURASHTRIAN PRODUCT
32B, குருவிக்காரன் சாலை,
கணேஷ் தியேட்டர் பாலம் அருகில், மதுரை - 625 009.
98428 14725
பழைய மோட்டார் EXCHANGE செய்யப்படும்
கம்பரசர் மோட்டார் ரூ12,500 முதல்
மோனோபிளாக் மோட்டார் ரூ 6500 முதல்
ஓபன்வெல் மோட்டார் ரூ 5500 முதல்
சப்மெர்சிபள் பம்ப் (காப்பர் ரோட்டர்) ரூ 7500 முதல்




தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துங்கள்


நூறாண்டு கால பட்டு பாரம்பரியம்
SRB SILKS HOUSE
145, East Veli Street, Thavitusanthai, Madurai-1.
Cell : 92445 00633

SRB FINSERVE PVT.LTD.
B1, Sivagangai Road, Managiri, K.K.Nagar, Madurai.
(Opp: Aavin High Tech Parlour)
Cell : 90922 97702

SRB RETAIL LLC.
503, Gracelyn Way Lewis Center,
COLUMBUS, OHIO, 43035.
Ph : +1 952 290 6405

SRB MULTI PURPOSE HALL
B1, Sivagangai Road, Managiri, K.K.Nagar, Madurai.
Cell : 89039 29247

EXPRESS BRIYANI
Anna Nagar, South Marret St., Kalavasal.
Cell : 97901 59015, 72007 26300

KEESHTU BOLI & SNACKS
East Gate - Kalavasal - Navabathkana Street, Madurai.
Cell : 81243 45000

SRB CATERING
135, 2nd East Main Road, Anna Nagar, Madurai.
Cell : 89398 97500

SWASI NATURO CURE HOSPITAL
ஆயுர்வேதம் – பஞ்சகர்மா – பாதகூஸா, வர்மா மருத்துவம்
S.R.B.Complex, 392, Anna Nagar, Madurai.
Cell : 95977 48952

S.R.B.KISHORILAL ★ S.R.B.MADANLAL
S.R.B.ARUNLAL

ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST
OM SHANTI
Cell: 90805 54802, 99424 90217
Prof. Dr. M.V. SUBBURAMAN
M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga),
M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)
MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE





Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University
(Retd. HOD of Hindi, The American College, Madurai).
ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M
4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

*With best compliments from*

## Kfam Group of Companies

## Pandian Surfactants Private Limited



**K.K.Dinakaran**
Chairman & Director

Manufacturers Representative for

Godrej — Chemical Division

IFF — Perfumes & Fragranaces

INDORAMA — Speciality Chemicals

## Kfam Micro Products Private Limited

Manufacturers of Speciality Chemicals &
Consumer Products

Micro Sol — Perfect Cleaning for Future Life



## Kfam Micro Polymers

Manufacturers of Blow Moulding & Injection Moulding Products









Regd. Office : **Pandian Surfactants Private Limited**

**Shed No.57/62, (NP) Sector 1, 3rd Street, Ambattur Industrial Estate,**
**SIDCO Industrial Estate, Pattaravakkam, CHENNAI-600 098.**
**Email : dinakaran@pfpl.in Kishan@pfpl.in www.pandiansurfactants.com**

**Branches** | **Chennai** | **Madurai** | **Hyderabad** | **Bangalore**

# ஜிஎஸ்டி-யில்
# சமாதானத் திட்டம்

நாடு முழுவதும் பல்வேறு மறைமுக வரி விதிப்பு சட்டங்கள்(Sales Tax, VAT, Central Sales Tax, Excise Duty, Luxury Tax, Entertainment Tax Etc.) ஒருங்கிணைந்து உருவாக்கப்பட்ட ஒரே வரி விதிப்பு சட்டமாக ஜிஎஸ்டி சட்டம் இயற்றப்பட்டது. அப்படி 01.07.2017 முதல் அமுலுக்கு வந்த ஜிஎஸ்டி சட்டத்தில் பல்வேறு மாற்றங்கள் மற்றும் Amendment மிக அதிகமாக வந்த வண்ணமாகவே இருந்து வருகிறது. இதுபோக GSTIN வலைதளத்தில் நிறைய படிவங்களும், அந்த படிவங்களை தாக்கல் செய்யும் பொழுது பலவித மாற்றங்களும், இன்றும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தச் சட்டம் புதிய சட்டம் என்பதால் அதன் தன்மைகளை அறிந்து கொள்வதற்கே அதிகாரிகளுக்கும், வணிகர்களுக்கும் பல ஆண்டுகாலம் தேவைப்படுகிறது. இதனால் வணிகர்கள் பெரும்பாதிப்புக்கு உள்ளாகி உள்ளனர். இச்சூழலில் ஜிஎஸ்டி சட்டம் இயற்றப்பட்ட முதல் ஐந்து வருடங்களுக்கு வரி விதிப்பில் ஏற்படும் வட்டித் தொகை (Interest) தண்டத்தொகையை (Penalty) தள்ளுபடி (Waiver) செய்யுமாறு GST Council மற்றும் அரசாங்கங்களுக்கு கோரிக்கை வைக்கப்பட்டதின்பேரில் ஒரு புதிய Amnesty Scheme சட்டப்பிரிவு 128A படி 54-ஆவது GSTகூட்டுத்தொடரில் அறிவிக்கப்பட்டு பின்பு Finance Act 02/2024 தேதி. 01.11.2024-ன் படி அறிமுகப்படுத்தப்பட்டது.

அந்தத்திட்டத்தில் சேர்ந்து பயனடையும் வகையில் SPL-01 மற்றும் SPL-02 படிவங்கள் ஜனவரி முதல் வாரம் 2025-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. அந்தத் திட்டத்தில் உள்ள முக்கிய சாராம்சம் கீழ்கண்டவாறு உள்ளன.

அ. 2017-18, 2018-19 மற்றும் 2019-20 ஆகிய மூன்று வருடங்களில் சட்டப்பிரிவு 73-ன்படி விதிக்கப்பட்டிருந்து வரியை மட்டும் 31.03.2025-க்குள் கட்டி விட்டால் அந்த வரி மீது ஏற்பட்ட வட்டி மற்றும் தண்டத்தொகை முழுவதுமாக ரத்து செய்யப்படும்.

ஆ. சட்டப்பிரிவு 74-ன் படி வரி விதிப்பு செய்யப்பட்டிருந்தால் இந்த திட்டம் செல்லாது.

இ. இந்த இடைப்பட்ட காலத்தில் சட்டப்பிரிவு 73-ன் படி வட்டி, தண்டத்தொகை விதிக்கப்பட்டு அதனை வணிகர்கள் செலுத்தி இருந்தால் Refund கோர இயலாது.

ஈ. இந்தத் திட்டத்தில் சேர விரும்பினால் மேற்படி மூன்று வருடங்களுக்கும் வரி ஏதேனும் கட்ட வேண்டி இருப்பின் அதனை முழுவதுமாக கட்டிவிட வேண்டும். Cash Ledger / Credit Ledger-ல் இருப்பு இருந்தால் அதில் இருந்தும் கட்ட வேண்டிய வரி தொகையை செலுத்திக் கொள்ளலாம் என கூறப்பட்டுள்ளது.

உ. Section-73ன் படி வரி விதிப்பினை வணிகர்கள் ஏதேனும் Appeal தாக்கல் செய்திருந்தாலும் அந்த Appeal-யை Withdraw செய்து இந்த திட்டத்தில் சேர்ந்து கொள்ளலாம்.

கடந்த 8 வருடமாக வணிகர்களின் பல வரி விதிப்புகளை பார்க்கும் பொழுது ஜிஎஸ்டி மறைத்தல் (Suppresion) என்று அதிகாரிகளால் கூறி வரி விதிப்பு செய்வது குறைந்த அளவே. ஜிஎஸ்டி நடைமுறைகளை சரிவர பின்பற்றாததினால் (Compliance Failure) அதிக அளவு வரி, வட்டி மற்றும் தண்டத் தொகைகள் ஏற்படுகின்றன. இந்த மாதிரியான நடைமுறைகளை சரிவர பின்பற்றாத இனங்களால் தான் மாதாமாதம் GST Collection கூடிக்கொண்டே போகின்ற காரணத்தினால் அரசும் Compliance Failure முறையை பிரதானமாக எடுத்துக்கொண்டு அதிகப்படியான வரி விதிப்புகள் மற்றும் வரி விதிப்பாணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

எனவே ஜிஎஸ்டி ஆரம்பிக்கப்பட்ட முதல் மூன்று வருடங்களுக்கு சட்டப்பிரிவு 73-ன் படி வரி விதிக்கப்பட்டிருந்தால் அதில் கண்டுள்ள வரியை செலுத்திய பின்பு வணிகர்கள் SPL-01 அல்லது SPL-02 படிவும் பூர்த்தி செய்து, அந்த வரி விதிப்பில் ஏற்பட்டுள்ள வட்டி மற்றும் தண்டத்தொகையை செலுத்தாமல் தள்ளுபடி பெற்றுக் கொள்ளலாம். இந்த திட்டத்தில் 31.03.2025க்குள் வரியை செலுத்த வேண்டும்.

இந்தத் திட்டம் செப்டம்பர் 2024-ல் 54வது ஜிஎஸ்டி கூட்டத்தொடரில் பரிந்துரைக்கப்பட்டு சட்டப்பிரவு 128-A - 01.11.2024 தேதியிட்ட Finance Act 02/2024 மூலமாக சட்டமாக்கப்பட்டாலும் அதனை பூர்த்தி செய்யும் படிவங்களான SPL-01 மற்றும் SPL-02, 2025 ஜனவரி முதல் வாரத்தில் தான் இணையதளத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன.

எனவே இந்த திட்டம் மூலம் மேலும் மூன்று மாதங்களுக்கு காலம் நீட்டிக்கப்பட வேண்டும் என (அதாவது 30.06.2025 வரை) பல்வேறு சங்கங்கள் அரசிடம் கோரிக்கை வைத்துள்ளன.





# சான்றோர் போற்றும் சர்வதேச மனிதவள தினம்

ஒவ்வொரு வருடமும் மே 20 அன்று "மனிதவள தினம்" உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது என்பதே, இதன் முக்கியத்துவத்தை மக்களுக்கு உணர்த்தும்.

தொழில்துறையில் சிறந்து விளங்குபவர்கள் மனிதவளத்தில் அதிக கவனம் செலுத்துபவர்களாக இருப்பார்கள் என்பது வரலாற்று உண்மை.

ஐநூறு வருடங்களுக்கு முன் (1498) வாஸ்கோடகாமா கடல் வழியில் நமது நாட்டை வந்தடைந்ததும் இதே மே 20ம் தேதி என்பது மனித வளத்திற்கு பொருத்தமான செயலாகவே தோன்றுகிறது.

நமது நாட்டின் மனித வளமும், கணிம வளமும் வெளிநாட்டவர்களின் கவனத்தை ஈர்த்தது, இதன்பிறகே என்பது சரித்திரம்.

நிர்வாகத்திற்கும், தொழிலாளிகளுக்கும் ஆகச்சிறந்த பாலமாக திகழ்வதுதான் மனிதவள நிபுணத்துவம். இன்றைய விஞ்ஞான மற்றும் எண்கணிம உலகில், மனிதவளத்தை சிந்தாமல் சிதறாமல், சிறந்த முறையில் சிக்கனமாகவும், சக்திமிக்கதாகவும் பயன்படுத்தப்பட வேண்டியது நிர்வாகத்தின் அவசர அத்தியாவசியமாகும். இதனை நேர்த்தியாகவும், அறிவுப்பூர்வமாகவும் கொண்டு செல்வது தான் மனிதவள மேம்பாட்டு நிபுணர்களின் தலையாய கடமை.

ஆலை அரசர் சி.எஸ். ராமாச்சாரி அவர்கள் புதுச்சேரியில் நடத்தி வந்த AFT என்ற ஆலையில் 8000த்திற்கும் அதிகமான தொழிலாளிகளை பணியமர்த்தி, மனிதவளத்திற்கு புதிய பரிமாணத்தை உருவாக்கித்தந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் பிறந்ததும் இதே மே மாதம் என்பது கூடுதல் மகிழ்ச்சி தகவல்.

இத்துறையின் பணிகள் ஏழு வகைப்படும்.

- ஆட்களை வேலைக்கு தேர்ந்தெடுத்து பணி அமர்த்துவது
- அவர்களுக்கு பயிற்சி மற்றும் தொழில் நுணுக்கங்களை கற்பிப்பது.
- அவர்களின் திறனை மேம்படுத்தி அதனை நிர்வாகத்தின் வளர்ச்சிக்குப் பயன்படுத்துவது.
- வேலையாட்களின் சம்பளம், சலுகைகள், போனஸ் மற்றும் நஷ்டஈடு போன்ற தேவைகளை நிர்ணயித்து, நிர்வாகத்துடன் இணைந்து செயல்படுத்துவது.
- நிர்வாகமும் தொழிலாளர்களும் சட்டம் மற்றும் விதிமுறைகளை பின்பற்றுகிறார்களா? என்று அப்போதைக்கப்போது கவனித்து சீர் செய்வது.
- நவீன தொழில் நுட்பங்களின் பயன்பாட்டை பகுத்தாராய்ந்து தொழிற்சாலையில் அறிமுகப்படுத்தி, தொழிலாளர்களின் சிரமத்தைக் குறைத்து செலவைக் கட்டுப்படுத்தி உற்பத்தியை பெருக்குவது.
- HRIS எனப்படும் மனிதவள தகவல் அமைப்பை உருவாக்கி அனைத்துவிதமான தரவுகளையும் பெற்று ஆக்கப்பூர்வமாக உபயோகிப்பது.

இவற்றைத் தவிர, இன்றைய பேசு பொருளாக விளங்கும் Artificial Intelligence - செயற்கை நுண்ணறிவை தேவையான இடத்தில், தேவையான விதத்தில் செயல்படுத்துவது மற்றும் சமூக ஊடகங்களை முழுமையாக பயன்படுத்தி சந்தைகளை விரிவுபடுத்திக்கொள்வது என்பதும் மனிதவள மேம்பாட்டின் தலையாய கடமை ஆகும்.

பொது அங்கீகாரம், வெகுமதி மற்றும் உரிய கௌரவத்தை அளித்தல், விழிப்புணர்வை ஏற்படுத்துதல் போன்றவை மனிதவள வல்லுநர்களை, ஒரு நிர்வாகம், முறையாக அரவணைக்கும் அணுமுறைகள் ஆகும்.

இயந்திரமனிதர்களை உபயோகிக்கத் தொடங்கிவிட்ட இப்போதைய தலைமுறைகளாலும் தவிர்க்க முடியாதது. மனிதவளம் என்பது நிதர்சனம். தேவைகள் அதிகமாகிவிட்ட நிலையில், மனித வளத்தைத் தேர்ந்தெடுப்பது, போட்டியாளர்களை சமாளிக்கும் யுக்தியில் முதன்மையானது.

21ம் நூற்றாண்டில் தொழில்துறையின் தாரக மந்திரம் மனிதவளமேம்பாடு என்றால் அது மிகையாகாது.

*– வீரஜா*


ஸ்ரீ முருகன் துணை

K.S. மோகன்லால்





ஹரிலால்

பில்டிங் மெட்டீரியல்ஸ் சப்ளையர்ஸ்

டிரைவர்கள் தேவை (ஸௌராஷ்ட்ரர்களுக்கு முன்னுரிமை)

98430 72626
98425 72626

- செங்கல்
- மணல்
- ஜல்லி (1 1/2", 3/4", 1/2")
- கிராவல்
- கிரஷர் தூசி
- சங்கர் டால்மியா சிமெண்ட் மூடை
- உடைகல்

குறிப்பிட்ட நேரத்தில் டெலிவரி செய்யப்படும்

No: 125, ஞானவேல் காலனி, கீரைத்தோட்டம் ரோடு, (மல்லிகை தெரு), தெப்பக்குளம், மதுரை – 9

# UPI பரிவர்த்தனைகளுக்கு GST வரியா?

இன்றைய காலக்கட்டத்தில் எல்லாமே டிஜிட்டல் மயமாகியுள்ளன. பணப்பரிவர்த்தனையும் டிஜிட்டல் ஆகிவிட்டது. தற்போது பெரும்பாலான மக்கள் கைகளில் பணம் வைத்துக்கொள்வது கிடையாது. நேரடி பணப்பரிவர்த்தனை மேற்கொள்வது பெருமளவில் குறைந்துவிட்டது. இந்நிலையில் டிஜிட்டல் பணப் பரிமாற்றம் செய்வதில் ஆர்பிஐ முக்கிய மாற்றம் கொண்டு வந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்தியாவில், கூகுள்-பே மற்றும் ஃபோன்-பே இரண்டும் பிரபலமான ஆன்லைன் பணப் பரிவர்த்தனை செயலிகளாக உள்ளன. டிஜிட்டல் பணப்பரிவர்த்தனை மக்களிடையே வெகுவாக அதிகரித்துவிட்டது.

தற்போது அனைத்து இடங்களிலும் யுபிஐ மூலமாக தங்களது மொபைல் ஃபோனில் இருந்து பணப்பரிவர்த்தனை செய்து வருகின்றனர். டீ கடை துவங்கி நகை வாங்குவது என அனைத்துக்கும் மக்கள் யுபிஐ பயன்படுத்துகின்றனர். டிஜிட்டல் பணப்பரிமாற்றத்தில் அவ்வப்போது மாற்றங்கள் கொண்டு வருவது வழக்கமான ஒன்று.

அந்த வகையில் நேஷனல் பேமண்ட் கார்ப்பரேஷன் யுபிஐ பேமண்டில் புதிய மாற்றம் ஒன்றை கொண்டு வந்துள்ளது. தற்போதைய நடைமுறையின்படி ஒவ்வொரு தனிப்பட்ட நபரும் மற்றவருக்கு யுபிஐ மூலமாக பணம் அனுப்புவதற்கான தினசரி உச்சவரம்பு ரூ. 1லட்சமாக உள்ளது.




தனி நபருக்கும், வர்த்தக நிறுவனத்திற்கும் இடையிலான யுபிஐ பரிவர்த்தனையின் உச்ச வரம்பு விதிவிலக்காக ரூ. 2 லட்சம் மற்றும் ரு. 5 லட்சம் எனவும் உள்ளது. இந்நிலையில் தனி நபருக்கும், வர்த்தக நிறுவனத்துக்கும் இடையிலான பணப்பரிமாற்றம் உச்ச வரம்பு உயர்த்தப்பட வாய்ப்புள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இதற்காக ரிசர்வு வங்கி, என்.பி.சி.ஐ நிறுவனத்துக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

அதே போல, ரூ. 2000-ஐ மீறும் யுபிஐ பரிவர்த்தனைகளுக்கு ஜிஎஸ்டி விதிக்கப்படுவதாக அரசாங்கம் யோசிக்கவில்லை.

அதாவது, ரூ. 2000-ற்கு மேல் யுபிஐ பரிவர்த்தனைகளுக்கு ஜிஎஸ்டி வரி விதிக்க அரசாங்கம் யோசிக்கின்றது என்ற பிரச்சாரம் தற்பொழுது சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றது. இது முற்றிலும் தவறானது மற்றும் எந்தவொரு ஆதாரமும் இல்லாதது. தற்பொழுது ரூ. 2000-ற்கு மேல் யுபிஐ பரிவர்த்தனைகளுக்கு ஜிஎஸ்டி வரி விதிக்க எந்தவொரு யோசனையும் அரசாங்கத்தின் முன் வைப்பில் இல்லை என இந்திய நிதி அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட 18.04.2025 தேதியிட்ட செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.



Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

Safety! Security!! Surveillance!!!

A TO Z CCTV SYSTEMS
CCTV Camera Exclusive Showroom

Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633

Raj Tv / Vijay Tv / Vijay Super / Star Vijay / Vasanth Tv / Tms Award

www.bestnumerologist.com
sharvaraksanmrs@yahoo.co.in

தென் தமிழகத்தின் சிறந்த எண் கணித வித்தகர் / ஏகலை எண்கணிதன்
உலக அளவில் சௌராஷ்ட்ரா சமூகத்தில் முதல் எண் கணித ஜோதிடர்

'ஷர்வ ரக்சன்' MRS
Best Numerologist

Your Name is Your Life



பிறந்த குழந்தைகளுக்கு, உங்களுக்கு, உங்கள் வியாபார நிறுவனங்களுக்கு
அழகான, அதிர்ஷ்டகரமான மற்றும் வஷியம் மிகுந்த பெயர் `எண் கணித ஜோதிட'
முறைப்படி கணித்துக் கொடுக்கப்படும். திருமண பெயர் பொருத்தம் பார்த்துக் கொடுக்கப்படும்

MANTHRALAYAM 26, Packiyam Street, Anupanadi Theppakulam Main Road
Opp to Sourashtra Girls Higher Sec School, Madurai

For Appointment
98421 11411



Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

**JSW COLOURON+ கூரைகள்**

**JSW Steel**

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

ISI தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்





## ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

**Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in**

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

**Meerakunj** RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

*Trust us with all your Electrical Plumbing and Agri needs...*



## மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com

## VIGNESH GRAPHICS

*All Kinds of Printing Solution*



- Brouchers
- Wedding Cards
- Souvenirs & Directories
- Visiting Cards

**Head Office :** 79-A, South Marret Street, Madurai - 625 001.

**Branch :** No. 33, Manjanakara Street, Madurai - 625 001.

**Branch :** Plot No. 48/5, Chinna Anuppanadi, Industrial Plot Area, Near ABC Badminton Club, Mela Anuppanadi, Housing Board Colony, Madurai - 625 009.

O : 96980 11066 | Ph : 93441 01432 | 98434 14310 | Email : vgmadurai1@gmai.com

- Letter Pads
- Shopping Bags
- Paper Bags
- Menu Cards

**உங்கள் உடல் எடையை பராமரிக்க குறைக்க / அதிகரிக்க விரும்புகிறீர்களா?**

- உங்கள் விருப்பமான உணவை தவிர்க்காமல்.
- கடின உடற்பயிற்சி இல்லாமல்.
- பாதுகாப்பு மற்றும் அதிக பயன்.
- உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் சரியான எடையில் ஆரோக்கியமாக இருக்க

ஆலோசனை பெற அணுகவும்

**L.N.R. தாமோதரன் - 98431 71477**

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2025-2027
Printed Matter

Date of Posting : 20.05.2025 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2025 - 2027
Date of Publication 20th of Every Month

0452 231 2293 98409 60846 / 90479 50885

**UG CHEMI JAGSAN**

**U G கெமி ஜாக்சன்**




(Innovators in Construction Admixtures &
Promoters of Geo Polymer Concrete - Concrete without Cement)

5A, New No : 17, Room No : 3, Pankajam Colony 4th Cross Street Madurai:625 009

E mail : info@ugchemijagsan.com / Web : www.ugchemijagsan.com



**வேல் மருத்துவமனை**


**வேல் சிறப்பு எலும்பியல் மையம்**

Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement

VALE HOSPITAL

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597

Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com



24hrs Service

**Dr. K.N. சுப்ரமணியன்** MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)

Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.




சிறப்பம்சங்கள்

- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

Experience the Expertise Advice

உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்

- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள்
- மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

- மூட்டு நுண்துளை சிகிச்சை
- விபத்து அறுவை சிகிச்சை
- முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை
- விளையாட்டு இயல்முறை பயிற்சி

*Right Treatment is Everyone's Right*




*Official Publication:*
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
136, East Veli Street, II Floor, Madurai - 625009
Call: 0452 2629955 / 93441 97952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.com